## Dummy முதலமைச்சரின் ஆட்சியில்

# காற்றில் பறக்கும் சட்டம் - ஒழுங்கு!

## காளையார்கோவில், கீழக்கரை படுகொலைகளைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, செப். 20 -**

**“Dummy முதலமைச்சரின் ஆட்சியில் காற்றில் பறக்கும் சட்டம் - ஒழுங்கு” என்று எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காளை யார்கோவில், கீழக்கரை சம்ப வங்களைச் சுட்டிக்காட்டி கண்ட னம் தெரிவித்துள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் இதுகுறித்துப் பதிவிட்டிருப்பதாவது :-

**Dummy முதலமைச்சரின் ஆட்சி அமைந்த நாள் முதல் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு காற்றில் பறந்து கொண்டிருக் கிறது.**

**இராமநாதபுரம் கீழக்கரை யில் கடந்த 15ஆம் தேதியும், சிவகங்கை காளையார்கோ விலில் அதற்கு அடுத்த நாளும் இரட்டைக்கொலை கள் நடந்து இருப்பது தமிழ் நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது.**

**காளையார்கோவில் சம்ப வத்தில் ஆள் மாறி கொலை செய்துவிட்டோம் என்று கூலிப்படையை சேர்ந்தவர் கள் சொன்னதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், கூலிப்படையை ஏவியவர் களை கைது செய்யாமல் காவல்துறை காலம் தாழ்த்து வது ஏன்?**

**‘குற்றவாளிகளை காவல் துறை பாதுகாக்கக் கூடாது’ என்று கொலையானவர்களின் உறவினர்கள் காளையார்கோ வில் பகுதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.**

**அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவோ, குற்ற வாளிகளை கண்டுபிடிக்கவோ வக்கற்று, போராடுவோரின் மீது காவல்துறை தடியடி நடத்தி இருக்கிறது. காவல் துறையின் இந்த அடக்கு முறையை வன்மையாக கண் டிக்கிறேன்.**

**இந்த இரட்டைக்கொலை சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும்.**

**இதனால் பாதிக்கப்பட் டுள்ள குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடும், நீதியும் கிடைக்க இந்த அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும்.**


இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## அதானே!

“தி.மு.க.வோடு சேர்ந்து
கொண்டு அ.தி.மு.க.வை
அழிக்க நினைத்தார்கள்....
அதனால
“த.வெ.க.வில் இணைந்து
அ.தி.மு.க.வை
அழிக்கும் முடிவை நாங்கள்
எடுக்க வேண்டியதா
போச்சு..

இப்படிக்கு
ராஜினாமா
தியாகிகள்

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

## மக்கள் விரோத விஜய் ஆட்சிக்கு - மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற

# இடைத்தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## பெரம்பூரில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

**சென்னை, செப். 20 -**

**சென்னை வடக்கு மாவட்டம் பெரம் பூர் பகுதி 44வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தரங்கெட்டு பேசிய முதலமைச்சர் விஜய் அவர் களின் ஆணவத்தை கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் பெரம்பூர் பழனி ஆண்டவர் கோவில் தெருவில் நடைபெற்றது,**

**இக்கூட்டத்திற்கு வட்ட செயலாளர் த.ஆறுமுகம் தலைமை தாங்கினார். பகுதி செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.**

இக்கூட்டத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் ஆர். எஸ். பாரதி பேசினார். அவர் பேசியதாவது :-

பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெறுகின்ற இந்த பொதுக்கூட்டம் மிகவும் உணர்ச்சிமயமான, கழகத் தொண்டர்கள் திரளாக பங்கேற்றுள்ள பொதுக் கூட்டமாக நடைபெற்று வருகி றது. இதே பழனி ஆண்டவர் கோவில் தெருவில் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு ஆர் டி சீதாபதி மாவட்ட செயலா ளராக இருந்தபோது, செங்கைசிவம் பகுதி செயலாளராக இருந்தபோது பல கூட்டங்களில் நான் பங்கேற்று உள் ளேன்.

### எழுச்சியைக் காண்கிறேன்!

அப்போது நான் கண்ட எழுச் சியை இப்பொழுது காண்கிறேன். ஆட்சி இருக்கும் பொழுது இது போன்ற கூட்டத்தை கூட்டினால் நலத் திட்ட உதவிகள் என்ற பெயரில் கூட் டத்தை கூட்டுவது வாடிக்கையாக இருந்தது, ஆனால் தற்பொழுது எதிர்க் கட்சியாக இருக்கிறது நடைபெறுகின்ற இந்த கூட்டம், கழகத் தோழர்களை யும் பொது மக்களையும் பங்கேற்க செய்து உள்ள சிறப்புமிக்க கூட்டமாக திகழ்கிறது,

எப்பொழுதுமே எதிர்க்கட்சியாக இருந்தால் தி.மு.கழகத்திற்கு ஒரு கெத்து உள்ளது, அதைத்தான் கலை ஞர் அவர்களும் சொல்லுவார், தி.மு.க.காரன் தூங்கினால் கும்பகர்ணன், எழுந்தால் இந்திரஜித் என்பார், அதைப் போல் தான் இன் றைக்கு ஒவ்வொரு தி.மு.க.காரனும், இந்திரஜித் ஆக வீறு கொண்டு எழுந்து உள்ளான் .

நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலில், தி.மு.க. ஆட்சியில் இருந் தபோது செய்த எண்ணற்ற சாதனை களை, நலத்திட்டங்களை எல்லாம் மக்கள் மறந்து விட்டு, மது கிண்ணத்தில் விழுந்த வண்டை போல் மயங்கி போய் விசிலுக்கு வாக் களித்து விட்டார்கள், இப்பொழுது இந்த ஆட்சியில் நடைபெற்று வரும் சீர்கேடுகளை கண்டு, மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டு, ஏண்டா இவர்களுக்கு ஓட்டு போட்டோம் என்று மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தெளிந்து வருகிறார்கள்.

### குற்ற சம்பவங்களில் த.வெ.க. நிர்வாகிகள்!

உதாரணத்திற்கு முதலமைச்சர் விஜய் வெற்றி பெற்ற இந்த தொகுதி கேட்பாரற்று உள்ளது, பத்து நாட்க ளாக குடிக்க குடிநீர் கூட கிடையாது, எங்கு பார்த்தாலும் மின்வெட்டு, இங் குதான் இப்படி என்றால், தமிழ்நாடு முழுவதும் கொலை, கொள்ளைகள், பாலியல் பலாத்காரங்கள் தினம் தினம் அதிகரித்து வருகிறது, இதில் யார் அதிகமாக ஈடுபடுகிறார்கள் என் றால், த.வெ.க.வை சேர்ந்தவர்கள் தான் அதிகம் குற்ற சம்பவங்களில் ஈடுபடுகிறார்கள் என்று பத்திரிகை களில் தினம் தினம் செய்திகள் வெளி வருகின்றன, உதாரணத்திற்கு நேற்று முன்தினம் கூட திருப்பதி குடை ஊர்வலத்தில் பாதுகாப்பு பணி ஈடுபட் டிருந்த பெண் போலீஸிடம், த.வெ.க. நிர்வாகி ஒருவர் சில்மிஷத்தில் ஈடுபட் டுள்ளார், பாதிக்கப்பட்ட பெண் போலீஸ் அளித்த புகாரின் பேரில் த.வெ.க. நிர்வாகி மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ஆதவ் அர்ஜுனா அவர் கள் தலையீட்டின் பேரில் அந்த நிர்வாகி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை இந்த பொதுக்கூட்டம் வாயிலாக நான் குற்றம் சாட்டுகிறேன்,

### மக்கள் விரோத த.வெ.க. அரசு!

த.வெ.க. ஆட்சிக்கு வந்து இந்த 115 நாட்களில் ரீல்ஸ் போடுவதை மட்டுமே வழக்கமாகக் கொண்டுள் ளார்கள், கஜானா காலி என்று சொல் கிற விஜய் அவர்கள், பட்டினப்பாக்கத் தில் சட்டமன்றம் கட்ட மட்டும் பணம் எப்படி வந்தது, அதுவும் குறிப்பாக மீனவர்கள் அதிகம் வாழ்கிற பகுதி அது, மீனவர்கள் பலத்த எதிர்ப்பு தெரி வித்த போதும் இந்த மக்கள் விரோத அரசு எதேச்சதிகாரத்தோடு சட்டமன் றம் கட்ட முயற்சிப்பது மிகவும் கண்ட னத்துக்குரியதாகும், இதே போல் தான் எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் அதே பட்டினப்பாக்கம் பகுதியில் அங் கிருந்து மீனவ மக்களை வெளியேற்ற முயன்ற போது, மீனவர்கள் மத்தியில்



மிகப்பெரிய போராட்டம் வெடித்தது, அப்போது எட்டு மீனவர்கள் கொல்லப் பட்டனர், இந்த வரலாறுகள் எல்லாம் இப்போதுள்ள ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் தெரியாது, இப் போதுள்ள அதிகாரிகளுக்கும் தெரி யாது, கொல்லப்பட்ட எட்டு பேரின் இறுதி ஊர்வலத்தில் தி.மு.கழகத்தின் சார்பில் நான் பங்கேற்று 10 கிலோ மீட்டர் தூரம் நடந்தே சென்று இறுதி மரியாதை செலுத்தினேன்,

கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தின் போது ஏராளமான திட்டங்கள் நிறை வேற்றப்பட்டது, அதையெல்லாம் மக் கள் மறந்து விட்டு மாற்றம் வேண்டும் என்று சொல்லி ஓட்டு போட்டதன் விளைவாக, அதன் பயனை மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டுள் ளார்கள்,

இன்றைக்கு விலைவாசி, தி.மு.க. ஆட்சி காலத்தை விட இந்த நான்கு மாதங்களில் பன்மடங்கு உயர்ந்து உள்ளது, குறிப்பாக சொல்ல வேண் டுமென்றால் ஒரு மூட்டை புழுங்கல் அரிசி , தி.மு.க. ஆட்சி காலத்தில் 1600 ரூபாய் இருந்தது, இன்று 2000 க்கு விற்கிறது, ஒரு கிலோ சர்க்கரை ரூபாய் நாற்பதில் இருந்து 74 க்கு உயர்ந்துள்ளது, ஒரு கிலோ துவரம் பருப்பு ரூபாய் 130 இருந்து, 170 ரூபா யாக உயர்ந்துள்ளது, இதுதான் இந்த ஆட்சியின் லட்சணம்,

ஊரிலே ஒரு பழமொழி சொல்வார் கள், நாயை குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது எதையோ தின்ப தற்கு வாலை ஆட்டிக் கொண்டு வெளியே ஓடுமாம், அது போல இருக் கிறது இன்றைய அரசியல் நிலை,

### சட்டமன்றம் நாடக மன்றமாக மாறிவிட்டது!

இன்றைய சட்டமன்றம் என்பது நாடக மன்றமாக மாறிவிட்டது, சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல யாருக்கும் தெரியவில்லை, மாறாக தி.மு.க. மீது வேண்டுமென்றே பொய்யான குற்றச் சாட்டை முன் வைக்கிறார்கள், சட்ட மன்றத்தில் காவல்துறை மானிய கோரிக்கையின் போது நடைபெற்ற விவாதத்தின் போது பங்கேற்று பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உத யநிதி ஸ்டாலின் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை போல் ஆதா ரத்தோடு பேசினார், பல்வேறு கேள் விகளை முன் வைத்தார், அதற்கு முதலமைச்சர் விஜய் அவர்கள் மூன்று நாள் அவகாசம் வாங்கிக் கொண்டு சென்றார், என்ன பதில் சொல்லலாம் என்று அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி உள்ளார், அதி காரிகளும் உதயநிதி கேட்ட கேள்வி கள் அனைத்தும் சரிதான், அவற் றுக்கு ஏதும் பதில் இல்லை என்று சொல்லி இருப்பார்கள், அதனால் அந்த கேள்விகளை மடைமாற்றம் செய்ய சர்க்காரியா கமிஷன் குறித்து எவனோ எழுதிக் கொடுத்ததை முதல மைச்சர் விஜய் சட்டமன்றத்தில் பேசி யுள்ளார், சர்க்காரியா கமிஷன் என் பது 1972 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்ற போது கொடுத்த புகாரின் அடிப் படையில், 1976 ஆம் ஆண்டு எமர் ஜென்சி அமல்படுத்தப்பட்ட பிறகு போடப்பட்ட கமிஷன், ஆனால் யார் புகார் கொடுத்தாரோ, அதே எம்.ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, எந்தவித ஆதாரமும் இல்லாததால் அவரே அதனை கைவிட்டார் என்பது வரலாறு.

அதேபோலத்தான் மிசா சட்டமும், மிசா என்கிற எமர்ஜென்சியை கொண்டு வந்த இந்திரா காந்தி, தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களி டம் இந்த சட்டத்தை நீங்கள் ஆதரித் தால் உங்கள் ஆட்சிக்கு மேலும் ஒரு வருடம் நீட்டிப்பு தருகிறேன் என்று கூறினார், அதை கலைஞர் அவர்கள் ஏற்கவில்லை, அதுமட்டுமல்ல இன் றைக்கு வாய் கிழிய காமராஜர் ஆட்சி வரவேண்டும் என்று பேசுகிறார்களே காங்கிரஸ் காரர்கள், எமர்ஜென்சி காலத்தில் காமராஜரை கைது செய்ய வேண்டும் என்று இந்திரா காந்தி அவர்கள் கலைஞர் அவர்களிடம் சொன்னார், அதற்கு கலைஞர் அவர் கள் மறுத்த காரணத்தினாலும், மேலும் காமராஜர் அவர்கள் இறந்த போது அவருக்கு அரசு மரியாதை கொடுத்ததாலும் அம்மையார் இந்திரா காந்திக்கு தி.மு.க. மீது கடும் கோபம் ஏற்பட்டது, அதனை தொடர்ந்து தான் 30.01.1976 ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

மிசா சட்டத்தில் இந்தியாவில் உள்ள பெருந்தலைவர்களான வாஜ் பாய், லல்லு பிரசாத் யாதவ், ஜெயபிர காஷ் நாராயணன் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

அப்படிப்பட்ட கொடூர சட்டமான மிசா சட்டத்தில் தான் நமது கழகத் தலைவர் அவர்கள் தளபதி அவர்க ளும் கைது செய்யப்பட்டார், கைது செய்யப்பட்டபோது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன வார்த் தையை நான் இங்கு நினைவு படுத்த விரும்புகிறேன், “” ஸ்டாலின், நான் கூட 29 வயதில் தான் சிறைக்குச் சென்றேன், ஆனால் நீ 23 வயதி லேயே சிறைக்கு செல்கிறாய், என்னை விட நீ பெரிய தியாகி ஸ்டாலின்” என கலைஞர் பாராட்டி னார், இதுதான் தி.மு.க.வின் தியாக வரலாறு,

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட கழகத் தலைவர் தளபதி, சிட்டி பாபு உள்ளிட்ட ஏராளமானார் எண்ணற்ற கொடுமைகளுக்கு உள்ளானார்கள்.

### மிசா சட்டம் குறித்து அவதூறு பரப்பும் முதலமைச்சர்!

மிசா சட்டம் குறித்து அவதூறு பரப் பும் இப்போதைய தமிழக முதலமைச் சருக்கும், எந்த ஒரு கட்சியிலும் நிலை யாக இல்லாமல், பல கட்சிகளுக்கு சென்று இப்பொழுது தவெக வில் சேர்ந்து அமைச்சராக இருக்கும் நிர் மல் குமாருக்கும் ஒன்றைச் ஆதார மாக சொல்லிக் கொள்கிறேன்,

“ 2013ம் ஆண்டு தற்போதைய பிரதமர் மோடி அவர்கள் ஒரு ட்விட்டர் ஒன்றை பதிவு செய்துள்ளார், அதில் மிசா எமர்ஜென்சி காலத்தின் போது இந்தியாவில் உள்ள பல்வேறு தலை வர்களும், அவர்களது மகன்களும் குறிப்பாக ஸ்டாலின் அவர்களும் கைது செய்யப்பட்டனர், பல்வேறு கொடுமைகளை அனுபவித்தனர்” என்று பதிவு செய்துள்ளதை, மிசா என்றால் தெரியாத கத்துக்குட்டிக ளுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன், அது மட்டுமல்ல மிசா சட்டத்தின் ஆவ ணங்கள் வேண்டும் என்று RTI ல் எங்களது வழக்கறிஞர்கள் கேட்டிருந் தனர், அதற்கு RTIல் இருந்து வந்த பதில், ஆவணங்கள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள், அரசு ஆவ ணங்களை மறைப்பது, அவற்றை ஒளித்து வைப்பது, : தவறாக பயன்ப டுத்துவது மாபெரும் குற்றமாகும்,

இதே போல் குற்றத்தை தான் டான்சி நில வழக்கின் போது நான் ஆவணங்களை கேட்டு தர மறுத்த தன் காரணமாக, நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அந்த வழக்கில் ஜெயலலிதா குற்றவாளி என்று தீர்ப்பு கிடைக்கப்பெற்று ஜெயலலிதா சிறைக் குச் சென்றார் என்பதை இன்றைய ஆட்சியாளர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன், நிச்சயம் அதே நிலை இப்போது ஆட்சியாளர்களுக்கும் ஏற் படும், தி.மு.க. மீது அவதூறு பரப்பி னால், பொய் குற்றச்சாட்டுகளை கூறி கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சித்தால் தி.மு.க.வினர் சும்மா விட மாட்டார்கள், சட்டத்தின் துணையோடு, உரிய ஆதாரங்க ளோடு இந்த மக்கள் விரோத ஆட்சி மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்ப டும், அது மட்டுமல்ல, ஊழலற்ற ஆட்சி தருகிறேன் என்று கூறிவிட்டு, இன்றைக்கு எந்தத் துறையில் பார்த் தாலும் ஊழல் நிறைந்துள்ளது, அவற் றையெல்லாம் எங்கள் சட்டத்துறை ஆதாரத்தோடு சேகரித்து வருகிறோம், ஏற்கனவே இந்த ஆட்சியினுடைய ஊழல் பட்டியல்களை ஆதாரத்துடன் வைத்துள்ளோம் அவற்றையும் சட்டப் படி உரிய தொடர் நடவடிக்கை எடுத்து மக்கள் விரோத விஜய் ஆட்சியின் மீது உரிய நடவடிக்கை எடுப்போம்.

### நூற்றி பதினைந்து நாள் ரீல்ஸ் ஆட்சி!

இந்த நூற்றி பதினைந்து நாள் ரீல்ஸ் ஆட்சியில் மக்கள் மிகவும் தெளிவடைந்து விட்டார்கள், கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற வில்லை, மக்கள் நலப்பணிகள் முடக் கப்பட்டு, கிடப்பில் போடப்பட்டுள்ளன, வளர்ச்சித் திட்டங்கள் ஏதும் முன்னெ டுக்கவில்லை, பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்பட்டது, இந்த ஆட்சியின் நிர்வாக திறமையின்மையால் பல்வேறு தொழிற்சாலைகள் அண்டை மாநி லங்களுக்குப் போய் கொண்டுள்ளது, இவையெல்லாம் மக்கள் தினம் தினம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார் கள், இவற்றிற்கெல்லாம் வருகின்ற மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்ட மன்ற இடைத்தேர்தலில் மக்கள் தங் கள் பதிலினை தங்களது வாக்குக ளின் மூலம் சவுக்கடியாக தெரிவிப்பார்கள், தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள் நிச்சயம் வெற்றி பெறு வார்கள், அவர்கள் வெற்றி பெறுவ தன் மூலம் இந்த மக்கள் விரோத ஆட் சியாளர்களுக்கு சரியான பாடம் புகட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் , வடசென்னை நாடாளுமன்ற உறுப்பி னர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணா, மாநில நிர் வாகிகள் இரா.நரேந்திரன், என்.மருது கணேஷ், மாவட்ட நிர்வாகிகள் எஸ். ஆர்.கமலக்கண்ணன், தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் வே. சிவக்குமார், த.கமலக்கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமான பங்கேற்றனர்.